# 25 ஹலால் – ஹராம் பேணல்

அல்லாஹ் அனுமதித்தவற்றை ஏற்று நடப்பதும் தடுத்தவற்றைத் தவிர்ந்து கொள்வதுமே ஹலால், ஹராம் பேணல் என்று அழைக்கப்படுகிறது. இது இஸ்லாத்தின் அடிப்படையான ஓர் அம்சமாகும்.

மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விடயங்கள் **ஹலால்** என்றும் தடுக்கப்பட்ட விடயங்கள் **ஹராம்** என்றும் அழைக்கப்படுகின்றன. ஹராமானவற்றைச் செய்வது குற்றமும் பாவமுமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சி அவனது சட்டத்துக்கு மதிப்பளித்து ஹலாலான எல்லைக்குள் வாழ்வதன் மூலம் மட்டுமே இம்மை, மறுமை நற்பயன்களை அடைய முடியும்.

''ஹலால் எது, ஹராம் எது என்பதைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே இருக்கிறது. அல்லாஹ்வுக்குரிய அவ்வதிகாரத்தில் மனிதர்கள் தலையிடுவது பெரும் குற்றமாகும்.'' (16: 116-117)

அல்லாஹ் மனிதனைப் படைக்கு முன்பே உலகில் உள்ள அனைத்தையும் அவனுக்காகப் படைத்தான். பின்னர் மனிதர்களைச் சோதிப்பதற்காக அவற்றுள் சிலதை ஹராமாக்கினான். மனிதனது பகிரங்க விரோதியாகிய ஷைத்தான் அவனை ஹராத்தின் பக்கமே தூண்டிக் கொண்டிருப்பான். அவனது நோக்கம் மனிதனை பாவம் செய்ய வைத்து அவனை நரகிற்கு இழுத்துச் செல்வதாகும்.

உண்மையில் ஹலாலாக்கப்பட்ட விடயங்களிலேயே அதிகளவு நன்மைகள் அமையப்பெற்றுள்ளன. ஹராமாக்கப்பட்டவற்றில் தீமைகளே அதிகம். அல்லாஹுத் தஆலா மனித நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தே ஹலால், ஹராத்தை ஏற்பாடு செய்துள்ளான்.

அல்லாஹ் ஹராமாக்கியவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### *1. உணவுடன் சம்பந்தப்பட்டவை*

★ பன்றியிறைச்சி

★ இறந்தவை

★ இரத்தம்

★ உடலுக்கும் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை

★ போதை ஏற்படுத்தக்கூடியவை

★ தங்கம் வெள்ளிப் பாத்திரங்களில் உண்ணலும் பருகலும்

**2. உடையுடன் தொடர்பானவை**

★ ஆண்களுக்குப் பட்டாடை, தங்க ஆபரணங்கள்

★ ஆண்கள் பெண் வேடத்திலும் பெண்கள் ஆண் வேடத்திலும் உடையணிதல்

★ இஸ்லாமிய வரையறைகள் பேணப்படாத ஆடைகள்

(உதாரணம்: உடலுறுப்புக்களை வெளிக்காட்டும் ஆடைகள்)

**3. உழைப்புடன் தொடர்பானவை**

★ வட்டியும் அதனுடன் தொடர்பானவை

★ இதர தடுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்

**4. ஆண் பெண் தொடர்பானவை**

★ அஜ்னபி, மஹ்ரமி வரையறை பேணாமை

**5. பாலியல் தொடர்பானவை**

★ ஸினா (விபச்சாரம்)

★ லிவாத் (ஓரினச் சேர்க்கை)

**6. பிற மனிதர்களின் உரிமைகளுடன் தொடர்பானவை**

★ திருட்டு

★ அபாண்டம் சுமத்துதல்

★ மானத்தைப் போக்குதல்

★ உயிரைப் பறித்தல்

★ சொத்துக்களைச் சேதப்படுத்தல்

### 7. நடத்தைகளுடன் தொடர்பானவை

- ★ பொய் பேசுதல்
- ★ ஏமாற்றுதல்
- ★ பொறாமை
- ★ தீய வார்த்தைகள் பேசுதல்
- ★ பொய்ச் சாட்சி கூறுதல்
- ★ ஆபாசமான செயற்பாடுகள்
- ★ அல்லாஹ் தடுத்தவற்றைப் பார்த்தல், கேட்டல்

மேற்கூறப்பட்ட விதமாக அல்லாஹ் ஹராமாக்கியவற்றைப் பட்டியற்படுத்தலாம். இவற்றைச் செய்வது அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்வதாகும். மேற்சொன்ன விடயங்களை முற்றாகத் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

''ஹலால் தெளிவானது. ஹராமும் தெளிவானது. அவை இரண்டுக்கும் இடையில் மயக்கமானவைகள் உள்ளன. அவற்றை அதிகமானோர் அறியமாட்டார்கள். யார் மயக்கமானவற்றைத் தவிர்ந்து கொள்கிறாரோ அவர் தனது மார்க்கத்தையும் மானத்தையும் பாதுகாத்துக் கொண்டவராவார். யார் மயக்கமானவற்றைச் செய்கிறாரோ அவர் ஹராத்தைச் செய்தவராவார். இவர் காவலிடப்பட்ட நிலத்தின் எல்லையில் மந்தை மேய்ப்பவனைப் போலாவார். அவனது மந்தைகள் அந்நிலத்தினுள்ளும் மேயலாம் அல்லவா? அறிந்து கொள்ளுங்கள் ஒவ்வொரு அரசனுக்கும் பாதுகாக்கப்பட்ட பிரதேசமுண்டு. அல்லாஹ்வின் பாதுகாக்கப்பட்ட பிரதேசம் அவன் ஹராமாக்கியவையாகும். அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக மனித உடலில் ஒரு தசைத் துண்டு உண்டு. அது சீர்பட்டால் உடல் முழுதும் சீர்படும். அது சீர்கெட்டால் உடல் முழுதும் சீர்கெடும். அறிந்து கொள்ளுங்கள் அதுதான் உள்ளமாகும்.'' (புஹாரி, முஸ்லிம்)

ஹராமான விடயங்களிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டியவற்றை அல்குர்ஆன், ஸுன்னா இரண்டும் பல்வேறு சொற்பிரயோகங்களில் சுட்டிக்காட்டியுள்ளன. ஹராமானவற்றை நெருங்க வேண்டாம், அதில் ஈடுபட வேண்டாம், தவிர்ந்து கொள்ளுங்கள், பின்பற்ற வேண்டாம், பாவமாகும், செய்ய வேண்டாம் போன்றன அவற்றுள் சிலவாகும்.

**ஆகவே இவற்றை நாம் விளங்கி ஏற்று ஹராமானவற்றில் இருந்து முற்றாக விடுபட்டு வாழ்வோமாக.**

**பயிற்சி**

*1. சரி பிழை கூறுக.*

1. ஹலால் எது ஹராம் எது என்பதைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் மனிதர்களுக்குண்டு. ( )
2. அல்லாஹ் ஹராமாக்கிய விடயங்களில் நன்மையை விட தீமையே அதிகமாகும். ( )
3. ஷைத்தான் மனிதனது உள்ளத்தில் ஹராமானவற்றின் பக்கம் ஆசையூட்டுகிறான். ( )
4. ஹலாலான விடயங்களைவிட ஹராமான விடயங்களே அதிகமாகும். ( )
5. ஹலால் ஹராம் பேணி வாழ்வதன் நன்மையை மறுமையிலேயே அடைய முடியும். ( )

2. நீர் வாழும் சூழலில் காணப்படும் ஹராமான செயற்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிடுக.